VIRUDHUNAGAR HINDU NADARS' SENTHIKUMARA NADAR COLLEGE
*(An Autonomous Institution Affiliated to Madurai Kamaraj University)*
[Re-accredited with 'A' Grade by NAAC]
Virudhunagar – 626 001.

# COURSE OUTCOMES - TAMIL DEPARTMENT

**முதலாமாண்டு தமிழ்**

**தற்கால இலக்கியம் (U2TAC11)**

CO 1. தற்காலத்தில் இயற்றப்படும் இலக்கியங்களைப் 'புதுமைப்' பொருள் கருதி மரபிலக்கியங்களிலிருந்து பிரித்தறிதல்.

CO 2. நவீன இலக்கியங்களான புதுமை இலக்கியங்களைத் தேசிய, இன, மொழி, சமூக, பொருளாதார மற்றும் பெண் விடுதலை இலக்கியங்களாக அடையாளப்படுத்துதல்.

CO 3. நவீன இலக்கிய வடிவங்களான புதினம், சிறுகதை, கவிதை, ஓரங்க நாடகம் ஆகியவற்றை அடையாளப்படுத்துவதுடன் அவற்றில் பின்பற்றப்படும் உத்திமுறைகளை இனங்காட்டல்.

CO 4. சமூக அக்கறையில்லாது இலக்கிய ரசனையை மட்டுமே முன்னிறுத்திய படைப்பாளிகளின் அழகியல் வாதத்தை உணரச் செய்தல்.

**இலக்கணம் – நன்னூல் – எழுத்ததிகாரம் (U1TAC12)**

CO 1. **தமிழின் மிகப் பழமையான** இலக்கண நூலான தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பதற்கு விரிவான **இலக்கணம்** வகுத்துள்ளது. இளங்கலைப் பட்ட மாணவர்களாதலால் அறிமுக நிலையில் தமிழ் எழுத்துக்களைப் பிழையற விளங்கச் செய்தல்.

CO 2. தொல்காப்பியத்துக்குப் பிந்திய நீண்டகால இடைவெளியில் எழுத்து வடிவ மாற்றங்கள் மற்றும் சார்பெழுத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் பின்னணியை உணர்தல்.

CO 3. கல்வி கற்கத் தகுதியுடையார் எனப் பாயிரம் உணர்த்தும் பின்னணியை விளங்கச் செய்தல்.

CO 4. தொல்காப்பியத்துக்குப் பிந்திய இலக்கிய வழக்கோடும் நாட்டு வழக்கோடும் எழுத்திலக்கணத்தைப் பொருத்திப் பார்த்தல்.

**தமிழக வரலாறும் பண்பாடும் (U1TAC41)**

CO 1. ஒரு மொழி, அதைப் பேசக்கூடிய மக்கள் வாழும் நிலம், அவர்களது பண்பாடு, அவர்களுக்கான அரசுகள் என்பவை ஓர் இனத்தின் அடையாளங்கள் என்பதை விளங்க வைத்தல்.

CO 2. தமிழர்கள் மிகப்பழமையான மரபு இனம் என்பதால் அவர்களது அடையாளங்களின் தொன்மையை அறிய உதவும் இலக்கியங்கள், தொல்லியல் தடயங்கள் உள்ளிட்ட சான்றாதாரங்களைக் கால வரிசைப்படி விளங்கச் செய்தல்.

CO 3. வேற்றரசுகளின் போர்ச்சூழலால் தமிழரசுகளின் எல்லை விரிந்தும் குறைந்தும் வந்ததைக் காலவரிசைப்படி அறியச் செய்தல்.

CO 4. தமிழர்களின் அக, புறப்பண்பாட்டில் வேற்றுப் பண்பாட்டின் தாக்கங்களை விளங்கச் செய்தல்.

**நீதி இலக்கியம் (U2TAC21)**

CO 1. தமிழின் புற இலக்கிய மரபு வடபுலச் சமய, அரசுத் தொடர்புகளினால் அற இலக்கிய மரபாக மாறிய பின்னணியை உணர்த்துதல்.

CO 2. முந்தைய திணை இலக்கியங்களின் யாப்பமைதி அற இலக்கியங்களில் வடிவ மாற்றம் பெற்றதை விளக்குதல்.

CO 3. திணை இலக்கியங்களின் அகம், புறம் என்னும் பாடுபொருள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் பொருள் நோக்கித் திரும்பிய பின்னணியை விளக்குதல்.

CO 4. அற இலக்கியங்களில் முதன்மை பெறும் திருக்குறள் உலகப்பொது நூலாகப் போற்றப்படுவதற்கான காரணங்களை எடுத்துக்காட்டுதல்.

**இலக்கணம் – நன்னூல் – சொல் (U1TAC22)**

CO 1. தொல்காப்பியம் தமிழின் சொல்லிலக்கணத்தை விரிவாகப் பேசுகிறது. தமிழின் சொற்பாகுபாட்டை அறிமுக நிலையில் நன்னூல் சொல்லதிகாரத்தைக் கொண்டு சுருக்கமாக விளங்கச் செய்தல்.

CO 2. தொல்காப்பியத்துக்குப் பிந்திய இலக்கிய வழக்கோடும் நாட்டு வழக்கோடும் சொல்லிலக்கணத்தைப் பொருத்திக்காட்டல்.

CO 3. தமிழின் திரிவுச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் அடையாளம் காணச் செய்தல்.

**தமிழும் உலகச் செம்மொழிகளும் (U2TAA2)**

CO 1. உலகிலுள்ள செவ்வியல் மொழிகளை அடையாளம் காணச் செய்தல்.

CO 2. செவ்வியல் மொழிக்கான தகுதிகளை விளக்குதல்.

CO 3. செவ்வியல் மொழிக்கான பண்புகள் தமிழ்மொழிக்குப் பொருந்துவதை விளக்குதல்.

CO 4. செவ்வியல் தகுதியோடுள்ள தமிழ் இலக்கியங்களை அடையாளம் காணச் செய்தல்.

**இரண்டாமாண்டு தமிழ்**

**பக்தி இலக்கியம் (U1TAC31)**

CO 1. தமிழர்களின் வழிபாட்டு மரபில் ஏற்பட்ட புறச்சூழலை அடையாளம் காட்டுதல்.

CO 2. சமய நிறுவனங்களுக்கிடையிலான மோதல்கள் தமிழ்இலக்கியங்களைப் பாதித்த வரலாற்றை விளக்குதல்.

CO 3. சமூக 'விஞ்ஞான' அடிப்படையிலான அற இலக்கியங்களைவிடச் சைவ, வைண சமயங்களின் 'மெய்ஞ்ஞான' இலக்கியங்கள் முதன்மையாக வழங்கியமையை விளக்குதல்.

CO 4. சைவ, வைணவ சமய இலக்கியங்களின் வகைமைகளை அறிமுகப்படுத்துதல்.

**இலக்கணம் – யாப்பும் அணியும் (U1TAC32)**

CO 1. காலந்தோறும் உருவான தமிழ் இலக்கிய வடிவங்களை அடையாளம் காட்டுதல்.

CO 2. செய்யுள் இலக்கிய வடிவங்களில் யாப்பிலக்கணத்தைப் பொருத்திப் பார்த்தல்.

CO 3. இலக்கியங்களை அழகுறச் செய்வதற்கான அணிகளின் விரிவாக்கத்தை விளக்குதல்.

CO 4. செய்யுளாசிரியர்களின் பொறுப்புணர்ச்சிகளை விளக்குதல்.

**மக்கள் தகவல் தொடர்பியல் (U2TAA3)**

CO 1. மனிதர் சமூக மனிதராக வாழ்வதன் அடிப்படை அலகு தொடர்பே ஆகும்.

CO 2. தகவல் தொடர்புகள் வளர்ந்து தொடர்பியலாகியதை அறியச் செய்தல்.

CO 3. ஊடகங்களின் வகைமைகளை விளங்கச் செய்தல்.

CO 4. தகவல் தொடர்புகளில் 'மொழி' பெறுகிற இடம் குறித்து புரியச் செய்தல்.

CO 5. தகவல் தொடர்பு சாதனங்களின் வழியாக மக்களிடம ஏற்படும் சமூக, கருத்துருவாக்க மாற்றங்களை அறியச் செய்தல்.

**காப்பிய இலக்கியம் (U2TAC41)**

CO 1. குறுகிய செய்யுள் வடிவம் மிக நீண்ட தொடர்நிலைச் செய்யுள் வடிவம் பெற்றதன் பின்புலத்தினை விளங்கச் செய்தல்.

CO 2. காப்பிய இலக்கணங்களை அறியச் செய்தல்.

CO 3. காப்பிய இலக்கியங்களில் தமிழ் மரபும் சைன, பௌத்த, ஆசீவக சமயங்களின் தடயங்களையும் புரியச் செய்தல்.

CO 4. நவீன இலக்கியமான புதினத்தின் வேர் காப்பியங்களில் உள்ளதை அறியச் செய்தல்.

**பொருள் இலக்கணம் – நம்பியகப் பொருள் (U2TAC42)**

CO 1. மிக விரிந்த தமிழ் இலக்கணப் பரப்பில் அகப் பொருளினை நுட்பமாக விளங்கச் செய்தல்.

CO 2. அகமரபுகளை காலத்துடன் பொருத்தி அறியச் செய்தல்.

**நாட்டுப்புற இலக்கியங்களும் கோட்பாடுகளும் (U1TAA4)**

CO 1. உலக மொழிகள் அனைத்திலும் தொன்மையான வடிவங்கள் வாய்மொழி இலக்கியங்கள் என்பதை உணரச் செய்தல்.

CO 2. வாய்மொழி மரபு, எழுதும் மரபு, அதிகாரம் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பை விளங்கச் செய்தல்.

CO 3. எழுதா இலக்கியங்களின் வகைமைகளை அறியச் செய்தல்.

CO 4. மக்களின் உழைப்பு, கொண்டாட்டம், சடங்கு, துக்கம் போன்றவற்றுடன் தொடர்புடைய உணர்ச்சிப் படிவங்களாக, பொருள் மிக்க எளிமையான கூறுகளைப் புரியச் செய்தல்.

CO 5. வெகுமக்களின் பண்பாடு, உளப்போக்கு ஆகியவற்றை அறிய உதவும் வகையினை விளங்கச் செய்தல்.

**ஆட்சித் தமிழ் (U1TAS41)**

CO 1. மக்கள் மொழி, ஆட்சி மொழி வேறுபாட்டைப் புரியச் செய்தல்.

CO 2. தமிழ் நிலத்தில் தமிழ் மொழி ஆட்சி மொழியாக அங்கீகரிக்கப்பட்ட நடந்த முன்னெடுப்புகள், போராட்டங்களின் வரலாற்றை விளங்கச் செய்தல்.

CO 3. நிர்வாகச் செயல்பாட்டிற்கான கலைச் சொல்லாக்கங்களை அறியச் செய்தல்.

## மூன்றாமாண்டு

**சிற்றிலக்கியம் (U2TAC51)**

CO 1. வலிமை வாய்ந்த பொருளாதார நிறுவனங்களான பேரரசையும், பெருங்கோயிலையும் சார்ந்து உருவான சிற்றிலக்கியங்கள் பக்திச் சார்பு கொண்டு எழுந்தமையை உணர்த்துதல்.

CO 2. பொருளியல் மையமிட்ட இறை – மன்னன் துதி பாடும் வகைமைகளாகச் சிற்றிலக்கியங்கள் மாறிய காலச் சூழலை உணரச் செய்தல்.

CO 3. புலவர்களின் விரிந்துபட்ட அறிவை அறியச் செய்தல்

**பொருள் இலக்கணம் – புறப்பொருள் வெண்பாமாலை (U1TAC53)**

CO 1. உலகில் தனித்துவமாக போருக்கும் கூட இலக்கணம், அறம் வகுத்த பாங்கினை உணர்த்துதல்.

CO 2. போரின் வாயிலாகப் புதிய நகரங்களையும் புதிய கருத்துருவாக்கங்களையும் கட்டமைக்க வேண்டிய அன்றைய காலத் தேவையை உணர்த்துதல்.

CO 3. கைக்கிளையும் பெருந்திணையும் புறத்திணையாக்கப்பட்டதை அறிய செய்தல்

CO 4. உடல் வலிமை, மன வலிமை ஆகியவை எக்காலத்திற்கும் தேவையானவை என்ற உண்மையை அறியச் செய்தல்

CO 5. கல்வி, ஈகை, புகழ், வீரம் கொடை போன்றவற்றைப் புரிந்து பயன்பெற வைத்தல்.

**மொழியியல் ஓர் அறிமுகம் (U2TAC54)**

CO 1. நவீன அறிவியலின் வழி 'மொழி'யைப் புரிந்து கொள்ளச் செய்தல்

CO 2. மொழியின் அமைப்பைப் புரிந்து கொள்ளுதல்

CO 3. வளமான இலக்கணப் பாரம்பரியமுள்ள தமிழ் இலக்கணத்தை மொழியியல் பார்வை மூலம் கண்டு கொள்ளுதல்.

CO 4. மொழியியலில் ஒலி, ஒலியன்களின் நுட்பங்களை அறியச் செய்தல்

CO 5. எழுத்திலக்கணத்தை ஒலியன்கள் வழியும் சொல் இலக்கணத்தை உருபன்கள் வழியும் விளங்கச் செய்தல்.

CO 6. இக்காலத் தமிழ் மொழியில் வழங்கும் ஒலியன்களைக் கண்டு கொள்ளச் செய்தல்.

**தமிழ் இலக்கிய வரலாறு (U1TAE51)**

CO 1. கால முறையில் இலக்கியங்களைப் பட்டியலிட்டு வரலாற்றுப் பார்வையில் அறிய வைத்தல்

CO 2. சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரையிலான இலக்கிய வகைகளின் அமைப்பு முறைகளைக் கற்றல்.

CO 3. காலத்திற்கும் இலக்கிய வடிவ மாற்றங்களுக்கும் உள்ள தொடர்பைப் புரிய வைத்தல்

CO 4. இலக்கியங்களின் பல்வேறுபட்ட செல்நெறிகளை மாணவர்களுக்கு அறிமுகம் செய்தல்

CO 5. பல்வேறுபட்ட இலக்கியங்கள் உருவான காலப் பின்னணியை அறியச் செய்தல்

CO 6. போட்டித் தேர்வுகட்கு பயனுறுமாறு தமிழ் இலக்கியங்களின் வரலாற்றை உணரச் செய்தல்.

**சங்க இலக்கியம் (U3TAC61)**

CO 1. சங்க காலத்தைச் சேர்ந்ததாகத் தொகுக்கப்பட்டுள்ள இலக்கியங்களை அறிந்து கொள்ளல்.

CO 2. தமிழரின் பண்டைய பண்பாட்டு நாகரிகங்களை அறிந்து கொள்ளல்.

CO 3. ஆற்றுப்படை இலக்கியங்களின் வழி பதிவு பெற்ற நாடகக் கலைஞர்களை அறிந்து கொள்ளல்.

CO 4. அகம், புறம் சார்ந்த கருத்துக்களை அறியச் செய்தல்.

CO 5. அக இலக்கியங்களின் வழி மாந்தர் உளப்பாங்கினை அறிந்து கொள்ளல்.

CO 6. புற இலக்கியங்களின் வழி அன்றைய மக்களின் பழக்கவழக்கங்களையும் அவற்றின் இன்றைய எச்சங்களையும் கற்றுணர்தல்.

**இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகள் (U2TAC62)**

CO 1. திறனாய்வு-மதிப்புரை-விமரிசனம் வேறுபாடுகளை அறிந்து கொள்ளல்.

CO 2. தமிழரின் தற்காலத் திறனாய்வுப் போக்குகளை அறிந்து கொள்ளச் செய்தல்.

CO 3. திறனாய்வின் வகைகளை அறிந்து கொள்ளல்.

CO 4. இலக்கியத்தைத் திறனாய்வு செய்யப் பயிற்சி பெறச் செய்தல்.

CO 5. இலக்கியங்களைப் பல்வேறுபட்ட கண்ணோட்டத்தில் பார்க்கும் அணுகுமுறையை அறிந்து கொள்ளல்.

**தமிழகக் கோயிற் கலைகள் (U2TAE61)**

CO 1. சமூக நிறுவனங்களில் ஒன்றாகக் கோவில் திகழ்ந்தமையை அறிந்து கொள்ளல்.

CO 2. தமிழகக் கோயில்களின் மூலம் தமிழக வரலாற்றின் பின்புலத்தை உணர்தல்.

CO 3. கோவில் கட்டுமான நுட்பங்களை மாணவர்கள் அறிந்து கொள்ளல்

CO 4. கோவில் கல்வெட்டுகள் மூலம் அன்றைய ஆட்சியர்களின் நிர்வாகம், சமயம் போன்றவற்றை அறிந்து கொள்ளல்.

CO 5. கோவில் வழிபாட்டு வழி சமூகப் படிநிலைகளை அறிந்து கொள்ளல்.

**திரைப்படக்கலையும் விமர்சனமும் (U1TAE62)**

CO 1. தமிழ்ச் சமூகத்தின் அசைவோடு மிக நெருங்கிய தொடர்புடைய தமிழ்த் திரைப்படங்களைப் புரிந்து கொள்ளச் செய்தல்.

CO 2. திரைப்படத்தை விமர்சனப் பூர்வமாகப் புரிந்து கொள்ளும் முறைமையினை விளங்கிக் கொள்ளல்.

CO 3. தமிழ் இலக்கியங்களின் காட்சி வடிவமாகத் தமிழ் திரைப்படங்கள் நிகழ்வதை அறிந்து கொள்ள வைத்தல்.

CO 4. நடிப்பு, இசை, எடிட்டிங் உள்ளிட்ட திரைப்படம் சார்ந்த பல்வேறு நுட்பங்களை அறிந்து கொள்ளுதல்

CO 5. உலகில் பிற மொழித் திரைப்படங்களிலிருந்து தமிழ் மொழித் திரைப்படங்கள் தனித்து விளங்கும் அடிப்படைகளை உணர்ந்து கொள்ளுதல்.